Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

மலர் 13
இதழ் 33
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 1 முஹறம் 17 திங்கட்கிழமை (15-3-71)

அருந்துங்கள்!
அண்ணா
கோப்பி
அண்ணா தொழிற்சாலை
இணுவில்

# அன்பழகன், ராமச்சந்திரன், அன்பில் தர்மலிங்கம் மந்திரிகள்

துரையப்பா கார் சம்பவம்

## கைதான ஒருவர் ரிமாண்டில்

### எம். பி.க்களும் விசாரிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், திங்கள் துரையப்பாவின் கார் குண்டினால் தகர்க்கப்பட்ட சம்பவத்தை யொட்டி கடந்த 3 தினங்களாக தேடப்பட்டு வந்த டாக்ஸியை பொலிஸார் கண்டுபிடித்தனர் டாக்ஸி சாரதி பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

சந்தேக நபரில் ஒருவர் மாஜிஸ்திரேட் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் அவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார். பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட மற்றும் இரு சந்தேக நபர்கள் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தையொட்டி விசாரணை செய்ய கொழும்பிலிருந்து ஒரு விசேஷ இரகசிய பொலிஸ் குழு வந்துள்ளது.

இச் சம்பவத்தையொட்டி எம். பிக்களில் சிலரி முன்னாள் எம். பிக்களில் சிலர், கடந்த தேர்தலில் போட்டியிட்ட அபேட்சகர் சிலரின் ஏஜண்டுகள், அரசியல் தலைவர்கள் முதலானோர் பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். விசேஷ பொலிஸ் குழு தொடர்ந்து விசாரணை செய்து வருகிறது. விசாரணை செய்யப்பட்ட பின் விடுவிக்கப்பட்டவர்கள் எவரிடமும் பொலிசார் மன்னிப்புக் கேட்டதில்லையென்

(8-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டில் இன்று பதவியேற்கும் தி. மு. க. ஆட்சி

### நிதியமைச்சும் முதல்வர் கருணாநிதியிடம்

சென்னை, மார்ச் 15

இன்று பதவியேற்கும் திரு. மு. கருணாநிதி தலைமையிலான தமிழ்நாடு தி. மு. க. புதிய மந்திரிசபையில் திரு. அன்பில் தர்மலிங்கம் திரு. கே. ராஜாராம் திரு கண்ணப்பன், திரு. அன்பழகன், எஸ் ராமச்சந்திரன் ஆகியோர் புதிதாக இடம் பெறுகின்றனர்.

திரு. மு. கருணாநிதி தமிழ்நாடு முதல்வர் பதவியுடன், நிதி; திட்டமிடல் அமைச்சு ஆகிய பொறுப்பையும் ஏற்கிறார். பழைய அமைச்சர்கள் 9 பேருடன் மொத்தம் பதினான்கு அமைச்சர்கள் அங்கம் வகிப்பார்கள்.

அமைச்சர்கள் விபரம்

பதவி ஏற்கும் அமைச்சர்களும், அவர்கள் பொறுப்புகள் விபரமும் வருமாறு:

நெடுஞ்செழியன் - கல்வி, திருமதி சத்தியவாணிமுத்து -ஹரிஜனர் நலம், சண்முகம்- உணவு உள்ளூராட்சி, மாதவன் - கைத்தொழில், எஸ் ராமச்சந்திரன்- போக்குவரத்து, அன்பில் தர்மலிங்கம் - விவசாயம், ராஜாராம்-பின்தங்கிய வகுப்பினர் நலம், கே. அன்பழகன்-பொதுநல சுகாதாரம், என். வி. நடராசன்- தொழில் அமைச்சு சி. பா. ஆதித்தனார், சாதிக்பாஷா, ஓ பி. ராமன், கண்ணப்பன், சுப்பையா.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டப் பேரவைக் குழுவின் தலைவராக திரு மு கருணாநிதி இன்று ஒருமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இன்று நடைபெற்ற ஆட்சிமன்றக் குழுவின் கூட்டத்தில் திரு. கருணாநிதியின் பெயரை திரு நெடுஞ்செழியன் முன்மொழிந்தார். இதனை திரு. எம். ஜி ராமச்சந்திரன், திரு. அன்பழகன், மதுரை முத்து ஆகியவர்கள் வழிமொழிந்தனர்.

சென்னை மவுண்ட்ரோடிலுள்ள அரசாங்க தோட்டத்தில் நடைபெற்ற சட்டப் பேரவைக் குழுக் கூட்டத்துக்கு திரு. என். வி. நடராஜன் தலைமை வகித்தார். சுமார் 20 நிமிடங்கள் கூட்டம் நடைபெற்றது.

திரு. கருணாநிதி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவுடன் மவுண்ரோடிலுள்ள அண்ணா சிலைக்கு மலர் மாலை சூட்டினார். பின்னர் கடற்கரையிலுள்ள அண்ணா சமாதிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார். அதன்பின்னர் கவர்னரைச் சந்திக்கச் சென்றார்.

திரு. கருணாநிதி இன்றே தமது அமைச்சர் அவையின் பெயர் பட்டியலை கவர்னரிடம் சமர்ப்பிப்பார் என்றும் நாளைய தினமே ஆட்சிப் பொறுப்பை கையேற்பார் என்றும் தெரிகின்றது.

தமிழ்நாட்டில் இன்று நண்பகல் வரை வெளிவந்த லோகசபை தேர்தல் முடிவுகளில் திருச்செந்தூர் தொகுதி முடிவு மட்டும் வரவில்லை. வெளிவந்த முடிவுகளில் 22 இடங்களை தி மு கவும் 9 இடங்களை இந்திரா காங்

(8ம்பக்கம் பார்க்க)

கிழக்குப் பாகிஸ்தானில்

## பிரச்னை தீரும் வரை போராட்டம்!

### முஜிபுர் ரஹமான் அறிவிப்பு

டாக்கா, மார்ச் 14

பாங்களா தேசிய மக்களின் பிரச்னை தீர்க்கப்படும் வரை கிழக்குப் பாகிஸ்தானில் போராட்டம் நீடிக்கும் என்று தேசிய அவாமிலீக் தலைவர் முஜிபுர் ரஹ்மான் அறிவித்துள்ளார்

கிழக்குப் பாகிஸ்தானில் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் வேலைக்குத் திரும்பவேண்டுமென்றும், இல்லாவிட்டால் பத்து வருடத் தண்டனை வழங்கப்படுமென்றும் இராணுவ உத்தரவு பிறப்பிக்கப்பட்டபோதிலும் ரஹ்மான் சட்டமறுப்பு இயக்கம் நீடிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அதிபர் யாஹ்யாகானை சந்திக்கத் தயாராக இருப்பதாகவும் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் சாதாரண வருடம் பங்குனி மாதம் 3-ந் திகதி (17-3-71) புதன் கிழமை மாலை 6 மணியளவில் வரும் சுபமுகூர்த்த வேளையில்,

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறைசெல்வன் வ. கயிலாயநாதன் அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறைசெல்வி சு. சரஸ்வதி அவர்களுக்கும்

திருவருள் நலத்தினால் மணமகள் இல்லத்தில் திருமணம் நிகழவிருப்பதால், அவ்வமயம் தாங்கள் தங்கள் இஷ்டமித்திர குடும்ப சகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகளை இல்லை என்பதைப் பணிவுடன் தெரிவிக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

ஆ. வயித்திலிங்கமும் புரியாரும்
[ஆ. வைத்திலிங்கம் அன் கோ, யாழ்ப்பாணம்]
156, பருத்தித்துறைவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மு சுப்பிரமணியமும் பாரிவாரும்
[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றில் இரண்டு பெரும்பான்மை

## திருமதி இந்திரா தாண்டிவிட்டார்!

புதுடில்லி, மார்ச் 14

இந்தியலோக்சபைக்கான தேர்தலில் இது வரை வெளிவந்த 510 முடிவுகளில் ஜகஜீவன் ராம் தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சி 349 ஸ்தானங்களைப் பெற்று மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தாண்டிவிட்டது.

மேற்கு வங்க சட்டசபைத்தேர்தலில்மாக்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி இது வரை வந்த முடிவுகளின்படி 108 ஸ்தானங்களையும் இந்திரா காங்கிரஸ் 105 ஸ்தானங்களையும் பெற்றிருக்கிறது.

## வரி விளம்பரம்

### தேவை

தையல் வேலையில் அனுபவமுள்ள பெண் பிள்ளை ஒன் தேவை. ஹோமதி காமன்ஸ், கிளானை எளபூமி, காரை நகர். 2891

அச்சுக்கூடம் ஒன்றுக்குத் தேவை விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 2887 'ஈழநாடு' மேற்பார்த்து யாழ்ப்பாணம் 2887

சாவகச்சேரியிலுள்ள கோவிலொன்றிற்குப் பூசகர் ஒருவர் தேவை. குடும்பத்துடன் தங்க வீட்டு வசதி செய்து கொடுக்கப்படும். தகுந்த ஊதியம் வழங்கப்படும். தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். P. M. சர்மா, 43/7, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13. 2889

### தேவை

எமது ஸ்தாபனத்தில் வருவிப்பாளராகக் கடமையாற்றுவதற்கு பிணைப்பணம் கட்டக்கூடிய ஒருவரும், உதவியாளர்களாக வேலை செய்ய இரு பெண் பிள்ளைகளும் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 2893, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2893

பயிற்சி பெற்ற தாதி (Trained Nurse) உடனடியாகத் தேவை. டாக்டர் கருமலிங்கம். பிரதான வீதி, யாழ்ப்பாணம். 2884

### விற்பனைக்கு

கார்:

சொந்தப் பாவனையிலுள்ள E Y 9000 தொடர்பிலக்கமுள்ள ஒஸ்ரின் சோமசெற்கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். A. இராஜசிங்கம், குக் அவனியு, வட்டுக்கோட்டை 2888

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா நடித்த
வீட்டுக்கு வீடு

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி - நாகேஷ்
நடித்த
கலங்கரை விளக்கம்

சில தினங்கள் மட்டும்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
ராமராவ் — சிவகுமார்
நடித்த
மாய மோதிரம்

குறிப்பிட்ட சில தினங்களுக்கு
கெப்பிட்டல் (கொழும்பு) விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி - காஞ்சனா
முத்துராமன் நாகேஷ்
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
அசோகன் - ஷீலா
நடித்த
விநாயகா பிலிம்ஸ்
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)

### காணவில்லை

பவளம். குணபேதம் உள்ளவ. வயது 80. நிறம் சிவப்பு, தலைமயிர் வெள்ளை, உயரம் 6 அடி. பச்சை சீலை, வெள்ளை சட்டை போட்டிருந்தார். கடைசியாக மல்லாகத்தில் காணப்பட்டா. இவரைக் கண்டால் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கோ அல்லது எனக்கோ தயவு செய்து அறிவிக்கவும். தி. பொன்னம்பலம், மாதகல். 2892

## தேசியகல்விச் சட்டம்

கோட்டை, ஞாயிறு

அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் புதிய தேசிய கல்விச் சட்டமொன்றைப் பிரகடனப் படுத்த வேண்டுமென கல்வியமைச்சர் பதியுதீன் முகமத்தை கேட்டுள்ளது. இச் சட்டத்தைப் பிரகடனப்படுத்துமுன்னர் நாட்டிலுள்ள கல்விமான்கள் அரசியல் தலைவர்கள் சமயத் தலைவர்கள் முதலியோரை கலந்தாலோசிக்க வேண்டும் எனவும் மேற்படி காங்கிரஸ் கல்வியமைச்சரைக் கோரியுள்ளது.

## துப்பாக்கிகள் திருட்டு

கொழும்பு, ஞாயிறு

பேராதனைக்குச் சமீபத்திலுள்ள ஹனரூவா விவசாய இலாகாவிலிருந்து இரு துப்பாக்கிகள் திருட்டுப் போய்விட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது

ஒருவர் தன்னைப் பிடித்துக்கொண்டிருக்க மற்றவர் துப்பாக்கிகள் இருந்த அறைக்குள் சென்று துப்பாக்கிகளை எடுத்ததாக இரவுக் காவல்காரர் பேராதனை பொலிஸ் நிலையத்தில் நடந்த விசாரணையில் தெரிவித்தார்.

(சி. பி ஏ)

நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
எம். ஜி. ஆர். - ராஜகுமாரி
நடித்த
குலேபகாவலி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
பெற்றால்தான் பிள்ளையா

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த
மஞ்சள் மகிமை

REGAL - Jaffna
Daily 3 shows
Poya days 4 Shows
Peter O' Toole
Katharine Hepburn
in
THE LION IN WINTER

MANOHARA
Jaffna
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya days 4 shows
Academy award winner
best Actor
John Wayne,
Ben Johnson
in
CHISUM
(Panavision Technicolor)

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் அறிவித்தல்

உத்தரவுச்சீட்டைப் பெற வேண்டிய வியாபாரம்/தொழில் புரியும் சகலரும் இம்மன்றத்தால் அறிவிக்கப்பட்ட திருத்தங்களையும் மாற்றங்களையும் செய்து முடித்துக்கொண்டு 31-3-71ஆம் திகதிக்கு முன்னர் 1971 ஆம் ஆண்டுக்குரிய வியாபார/தொழில் உத்தரவுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

தவறின் வேறு அறிவித்தல் எதுவுமின்றி 1971ஆம் ஆண்டுக்குரிய வியாபார/தொழில் உத்தரவுச் சீட்டைப் பெறாது வியாபாரம்/தொழில் நடாத்துவதாகக் குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்படும் என்பதை இத்தால் தெரிவிக்கிறேன்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகராட்சி மன்ற ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
12-3-1971. 3207

## 5 வருடத்தின்பின் கூடியது

ஒட்டுசுட்டான், ஞாயிறு

ஒட்டிசுட்டான் சின்னத்தம்பி வித்தியாலயத்தின் பெற்றார் ஆசிரிய சங்கம் ஐந்து வருட இடைவெளிக்குப்பின்னர் இம்மாதம் 8-ம் திகதி பாடசாலைத் தற்காலிக தலைமைஆசிரியர் திரு. க. சச்சிதானந்தசிவம் தலைமையில் கூடியது தற்சமயம் ஆசிரியர்கள் பற்றாக்குறை ஆசிரியர் இல்லாமைபோன்ற பிரச்சனை எழுந்ததும் சங்கங்களின் அவசியத்தை நன்கு மக்கள்புரிந்துகொண்டனர் எனத்தலைவர் தமது உரையில் தெரிவித்தாராம் இதையடுத்து சங்க நிர்வாக சபைதெரிவும் உத்தியோகத்தர்தெரிவும்நடைபெற்று தலைவராக திரு. க. சச்சிதானந்தசிவமும் உபதலைவராக திரு. க நாகலிங்கமும் செயலாளராக திரு. செ. தருமலிங்கமும் பொருளாளராக க. தங்கராசாவும் தெரிவு செய்யப்பட்டனர் திருவாளர்கள் பொ. இராசையா, கே. பொன்னையா, வ. பரராஜசிங்கம், ஆர். இராஜசேகரம் ம. துரைராஜசிங்கம் ஆகியோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.

## பிரிவுபசாரம்

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு பட்டின சபை காரியதரிசியாக கடமையாற்றி ஏரூவூர் பட்டினசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள திரு எம். சின்னையாவுக்கு பட்டின சபைத்தலைவர் திரு. எஸ். செல்வரத்தினம் தலைமையில்பிரிவுபசாரம் நடாத்தப்பட்டது.

## பொது சுகாதாரப் பரிசோதகர் பதவிகள் (தற்காலிகம்)

### மாநகர சபை, யாழ்ப்பாணம்.

யாழ். மாநகரசபை ஆணையாளரால் மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் ஒய்வு பெற்ற பொது சுகாதாரப் பரிசோதகர்களிடமிருந்து மட்டும் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரர் தங்களுடைய வயது, முந்திய வேலை, அனுபவம் முதலியவற்றை குறிப்பிட்டு சான்று பத்திரங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

நியமனம் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் வழங்கப்படுவதுடன் நாள் விகிதத்திலேயே சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் முடிவு திகதி 24-3-1971.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர சபை ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
13-3-1971. 3208

ஐ நா. செயலாளர் பதவிக்கு

## இலங்கையின் வேட்பாளர்

கோட்டை, ஞாயிறு

ஐ. நா. வில் இலங்கையின் தூதராகக் கடமையாற்றும் திரு. ஷேர்லி அமரசிங்காவை ஐ நா காரியதரிசிப் பதவிக்கு வேட்பாளராகப் போட்டியிட நிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது

தற்போது ஐ நா செயலாளராகக் கடமையாற்றும் திரு. யுதாண்டின் பதவிக்காலம் இவ்வருட இறுதியில் முடிவடைவதால் இப்பதவி வெற்றிடமாகிறது. வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து திரு. அமரசிங்கா மேற்படி உயர் பதவிக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே அரசாங்கம் அவரை வேட்பாளராக நிறுத்த முடிவு செய்துள்ளது.

## உப்பு வரவழைக்கப் படுகிறது

கோட்டை, ஞாயிறு

அம்பாந்தோட்டையிலிருந்து உப்பு வரவழைப்பதற்கென அரசாங்கம் 50 லொறிகளை ஈடுபடுத்தியுள்ளது இந்த லொறிகள் மூலம் மாத்தறைக்கும் அங்கிருந்து புகைவண்டிமூலம் கொழும்புக்கும் தினம் 200 தொன் உப்பு வரவழைக்கப்படுகிறது என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 'ஒன்பது அம்சக்கோரிக்கை மறுக்கப்பட்டால் பகிஷ்கரிப்பு'

ஊரதீவு, திங்.

'இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் எதிர்காலம் இருள்சூழ்ந்து வருகின்றது என்பதைத் தமிழ்த் தலைவர்கள் உணர்ந்து ஒன்றுபட்டமையை தமிழினத்தின் சரித்திரத்திலேயே ஒரு முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சியாக எமது மன்றம் கருதுகிறது. தமிழ்த் தலைவர்கள் கூட்டாகத் தயாரித்த ஒன்பது அம்சக் கோரிக்கையை மக்கள் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். தவறின் அரசின் மீது தமிழ் மக்கள் நம்பிக்கை வைப்பதில் அர்த்தமில்லை. எனவே அரசமைப்பு நிர்ணயசபை ஒன்பது அம்சக் கோரிக்கையை நிராகரிப்பின் சபையை சகல தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும் பகிஷ்கரிக்க வேண்டும்'

இவ்வாறு அரசினரையும், தமிழ் ஆட்சிமன்ற உறுப்பினர்களையும் கோரும் தீர்மானமொன்றை ஊரதீவு இளந் தமிழர் மன்றப் பொதுச் சபை நிறைவேற்றியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு வங்காளத்தேர்தல் நிலைமை

# மார்க்ஸிய தலைவர் பாசுவிடம் அஜாய் முகர்ஜி தோற்ருர்!

## எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லை

புதுடில்லி, மார்ச் 14

**மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் எந்த ஒரு தனிக்கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. என்றுலும் இன்று காலை வரை தெரியவந்த முடிவுகளின் படி இந்திரா காங்கிரஸ் கட்சி மார்க்ஸிய காங்கிரஸ் கட்சியைவிட ஏழு இடங்களைக் கூடுதலாகப் பெற்று முன்னணியில் இருந்தது.**

மேற்கு வங்காளத்தில் முன்னுள் முதலமைச்சர் அஜாய் குமார் முகர்ஜியும் முன்னுள் துணை முதல்வர் ஜோதிபாசுவும் நேரடியாக மோதிய பாராநாகர் தொகுதியில் திரு ஜோதிபாசு வெற்றிபெற்ருர்.

திரு. முகர்ஜி இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டார். ஏற்கனவே அவர் தமது சொந்தத் தொகுதியில் வெற்றிபெற்றிருக்கிருர்

மேற்கு வங்காள சட்டசபைக்கு 280 தொகுதிகள் உண்டு. இவற்றில் 251 தொகுதிகளுக்கு முடிவுகள் இன்று காலைவரை அறிவிக்கப்பட்டன இதில் இந்திரா காங்கிரஸ் கட்சி 102 இடங்களில் வெற்றிபெற்று முன்னணியில் நிற்கின்றது. திரு. ஜோதிபாசு தலைமையிலான மார்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி 92 இடங்களைக் கைப்பற்றியிருக்கின்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி 13 இடங்களையும் பாங்களா காங்கிரஸ் 8 இடங்களையும் கைப்பற்றியிருக்கின்றன முஸ்லீம் லீக்கிற்கு 7 இடங்கள் கிடைத்துள்ளன. நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஓர் இடத்தை மட்டும் பிடித்திருக்கின்றது. இதரக்கட்சிகள் ஏனைய இடங்களை தம்வசமாக்கியுள்ளன.

பாராகர் தொகுதியில் திரு ஜோதிபாசு அஜாய் முகர்ஜியை சுமார் 11 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்திருக்கிருர்.

மேற்கு வங்காளத்தில் வெற்றிபெற்றிருக்கும் ஒரே ஒரு நிஜலிங்கப்பா காங்கிரஸ்காரரும் முன்னுள் முதலமைச்சருமான திரு. பி. எல். சென் இந்திரா காங்கிரஸ் கட்சிக்குக் கிடைத்துள்ள வெற்றி குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் ஜகஜீவன்ராம் காங்கிரஸ் கட்சியை ய தேசிய காங்கிரஸ் கட்சியாக மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள். இதுபற்றிய சிக்கல் இனி இருக்கமுடியாது என்ருர்.

இந்திரா காங்கிரஸ் கட்சி இப்பொதுத் தேர்தலில் பெற்றுள்ள பெருவெற்றி குறித்து உலகின் பல நாடுகளையும் சேர்ந்த தலைவர்கள் தம் பாராட்டுக்களைத் தெரிவித்திருக்கிருர்.

யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோ, ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதம மந்திரி, நேபாள மன்னர் மகேந்திரா, எதியோப்பிய மன்னர் ஹெய்லி செலாஸி, லாவோஸ் இளவரசர் சுவன்னபூமா, சாம்பியா அதிபர் கவுண்டா போன்றவர்கள் இந்திராவுக்குப் பாராட்டுகளை அனுப்பியுள்ளனர்

டாக்கா வானெலி நேற்று இந்தியாவில் இந்திரா காங்கிரஸ் வெற்றிபெற்றது பற்றி விமர்சனம் செய்தது. இரு நாடுகளுக்குமிடையிலான ஒரு தெளிவான கொள்கையை இனி கடைப்பிடிக்க முடியும் என்று டாக்கா வானெலி கூறியது

இன்று காலை வரை வெளியான லோகசபைத் தேர்தல் முடிவுகளின்படி இந்திரா காங்கிரஸ் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் பெறுவதற்கு இன்னமும் பத்து இடங்களைப் பெற வேண்டும். 518 தொகுதிகளில் 480-க்கு முடிவுகள் வெளியாகியுள்ளன இதில் 338 இடங்களை இந்திரா காங்கிரஸ் பெற்றுள்ளது.

ஒரிஸா சட்டசபையில் இந்திரா காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றிருக்கின்றது இதுவரை வெளியான முடிவுகளின்படி இந்திரா காங்கிரஸ் 51 இடங்களையும் சுதந்திரா கட்சி 36 இடங்களையும் உட்கல் காங்கிரஸ் 28 இடங்களையும் பிரஜாசோஷலிஸ்ட் ஜார்க்கண் கட்சிகள் தலா 4 இடங்களையும் கம்யூனிஸ்ட் கட்சி 3 இடங்களையும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி 2 இடங்களையும் நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஜனசங்கம் இரண்டும் தலா ஓர் இடத்தையும் சுயேச்சைகள் நான்கு இடங்களையும் கைப்பற்றியிருக்கின்றன.

### பொறுப்பு கூடியுள்ளது

தமது கட்சிக்கு மக்கள் அளித்துள்ள கட்டளையின் காரணமாகத் தங்களின் பொறுப்புக் கூடியிருப்பதாக காங்கிரஸ் தலைவர் திரு. ஜகஜீவன்ராம் கருத்துவெளியிட்டிருக்கிருர்.

மக்கள் தங்களுக்காக ஏதேனும் செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கின்ருர்கள். இதல் எமது பொறுப்புக் கூடியிருக்கின்றது என்று அவர் குறிப்பிட்டார், பெருவெற்றி காரணமாக கட்சி மெத்தனமாக இருந்துவிடாதாவென்று நிருபர் கேட்டபோது எழுச்சிபெற்றுள்ள மக்கள் நாங்கள் மெத்தனமாக இருப்பதற்கு விடமாட்டார்கள் என்ருர்

## 250 மைல் வேகமுடைய புரட்சிகரவாயுமெத்தைரயில்

லண்டன், மார்ச். 14

ரயில்போக்குவரத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்படவிருக்கிறது. காற்று மெத்தையில் மிதந்தபடி அதிவேகமாகச் செல்லும் புதுமையான 'வாயுமெத்தை ரயில்கள்' எதிர்காலத்தில் இப்புரட்சிகரமான மாற்றத்தை தோற்றுவிக்கவிருக்கின்றன. இந்தரயில்கள் சேவையில்விடப்பட்டதும் 250 மைல்வேகத்தில் பிரயாணிகள் நகரத்திற்கு நகரம் 'பறந்து' செல்வது சாத்தியமாகும்.

பிரிட்டிஷ் தேசிய ஆராய்ச்சி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த பொறியியல் விஞ்ஞானிகள் இந்த ரயிலை உற்பத்தி செய்வதில் இப்பொழுது தீவிரமாக ஈடுபட்டிருக்கிருர்கள். மாதிரி ரயில் ஒன்றை அமைத்துள்ள இவ்விஞ்ஞானிகள் இதனை விரைவில் பரிசோதனைசெய்து பார்க்கவிருக்கிருர்கள். பீட்டரீஸ்பர்க் என்னுமிடத்தில் நிறுவப்பட்டுள்ள மூன்றுமைல் தூர கான்கிரீட் பாதையில் இந்த மாதிரிரயில் பரிசோதனைக்கு ஓடவிடப்படும்;

இந்த வாயுமெத்தை ரயில்கள் தண்டவாளத்தில் ஓடுவதில்லை. இதற்கென விசேஷமாக அமைக்கப்பட்ட கான்கிரீட் பாதையிலேயே இந்த ரயில்கள் ஓடவிடப்படும். சக்கரங்களில் ஓட ஆரம்பித்த பின்னர் இந்த ரயில் வாயுமெத்தையில் அற்புதமான முறையில் அதிவேகமாக மிதந்து செல்லும் கான்கிரீட் பாதையில் அமைக்கப்படவிருக்கும் நுட்பமான உலோகத் தட்டிலிருந்தே இந்த ரயிலை இயக்கி, உந்திச்செல்லும் மின்சக்தி பெறப்படும்.

சக்திவாய்ந்த உந்துவிசைப் பொறிகளால் இயக்கப்படும் இந்த ரயில் 250 மைல் வேகத்தில் செல்லும்போது எவ்வித ஆட்டமோ இரைச்சலோ ஏற்படாது. வானெலிக் கட்டுப்பாட்டுக் கருவிகள் மூலம் தன்னிச்சையாக இயங்கும் புதுமையான வாகனமிது. போக்குவரத்துத் துறையில் இது பெரும் புரட்சியை ஏற்படுத்துமென ஆராய்ச்சி விஞ்ஞானிகள் கூறகிருர்கள்

பிரிட்டனில் மட்டுமன்றி அமெரிக்காவிலும் பிரான்ஸிலும் இம்மாதிரியான ரயில்களைப் படைப்பதற்கான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## கைக்குண்டு வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

கைக்குண்டுவழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் மாஜிஸ்திரேட் திரு. கொல்வின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது

எதிரியான தவலிங்கம் கோர்ட்டில் ஆஜராகயிருந்தார். எதிரிசார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், புறக்டர் வி. ஏ. ஈ. பாலசிங்கத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம்மாதம் 31-ம் தேதிக்கு ஒத்திவைத்தார்.

## சிங்களப் பயிற்சி

சுழிபுரம், ஞாயிறு

சிங்களம் ஐந்தாம் வகுப்பு சித்தியடைந்தால் போதும் என்ற கட்டுப்பாட்டை நீக்கி எட்டாம் வகுப்பு சித்தியடைய வேண்டும் என்ற ஓர் சுற்றுநிருபத்தை மருந்தாளர்கள் (பாமசிஷ்ற்) கவனத்துக்கு சுகாதார அமைச்சு அனுப்பியுள்ளது. சிங்களமொழிஅறிவு தேவையற்று இருந்த (வாட் பணியாளர்கள்) அட்டன்டன்ட்மார்கள் ஐந்தாம் வகுப்பு சிங்களமொழி சித்தியடைந்திருக்கவேண்டும் எனவும் அச்சுற்று நிருபத்தில் பணிக்கப்பட்டுள்ளனர்.

## பொலிஸ் படக்காட்சி

சுழிபுரம், ஞாயிறு

பொலிஸ் பகுதியினரால் சித்தன்கேணி மகா கணபதிப்பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் போக்குவரத்து குற்றத்தடுப்பு சம்பந்தமான படக்காட்சி காண்பிக்கப்பட்டது.


## 'சோவியத் நாடு'

★ சோவியத்-ஈழத்து மக்களின் நட்புறவின் குரல் "சோவியத் நாடு"

'சோவியத்நாடு' வாசியுங்கள்

★ சோவியத் மக்களின் சாதனைகளைப் பற்றியும், விசேஷமாக மத்திய ஆசிய மக்களின் புதிய வாழ்வைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.




'சோவியத்நாடு' வாசியுங்கள்

எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:-

தகவல் பகுதி, சோவியத் ஸ்தானிகராலயம்,
27, ஸர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தை, கொழும்பு 7.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாக்கு

குழம்பிலேயே தோய்ந்துள்ள கரண்டிக்குக் குழம்பின் சுவை தெரியாது. வாழ்க்கை முழுதும் அறிவாளியோடு பழகினாலும் முட்டாளுக்கு உண்மை புலப்படாது. — புத்தர்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 1ந் திகதி (15-3-71)

## கைக்குண்டு ஆபத்து

கொடிகாமம் என்ற இடத்தில் சில தினங்களுக்கு முன் நடந்த வெடிவிபத்தில் மூன்று இளைஞர்கள் அந்த இடத்திலேயே மாண்டார்கள். இவ்விபத்தில் காயமடைந்த மற்றோர் இளைஞனும் நேற்று முன்தினம் மரணமானார். வெடிகுண்டு தயாரித்துக்கொண்டிருக்கையில்தான் இவ்விபத்து நடந்ததாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. இதற்கு முன்னரும் இப்படியான விபத்துக்கள் நிகழ்ந்திருக்கின்றன. கொழும்புப் பகுதியில்தான் ஆபத்தான கைக்குண்டுச் சம்பவங்கள் பெருந்தொகையாக இருந்தன. இப்போது கைக்குண்டு தயாரிப்பது இலங்கையின் குடிசைக் கைத்தொழில்களில் ஒன்றாகிவிட்டதோ என்று கருதுமளவுக்கு கைக்குண்டுச் சம்பவங்கள் நாடெங்கும் அதிகரித்துள்ளன. இதையிட்டு யாரும் பெருமை கொள்ளமுடியாது.

கைக்குண்டு என்றால் என்ன என்று கேட்கும் நிலையிலிருந்த யாழ்ப்பாணத்தில் இப்போது அடிக்கடி கைக்குண்டுச் சம்பவங்கள் நிகழ்வது கவலைக்குரிய விஷயம்.

நாட்டின் எந்தப் பிரச்னைக்கும் கைக்குண்டுகளினால் [illegible] தீர்வு காணமுடியாது. அரசியல் சமய சமூகத் தலைவர்கள் இதை மக்களுக்கு உணர்த்தவேண்டியது அவர்களின் பெரும் பொறுப்பும் கடமையுமாகும்.

இதேசமயம் கைக்குண்டு தயாரிப்பதற்குத் தேவையான ரசாயனப்பொருள்கள் சுலபமாகக் கிடைக்காத வகையில் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் இனியும் தயங்கக்கூடாது.

இப்பொருள்கள் இப்போது எந்தக் கடைகளிலும் எவ்வித கட்டுப்பாடுமின்றி வாங்கக்கூடியதாக இருக்கிறது. பட்டாசு, வாணம் உற்பத்தி செய்வதற்கும் மற்றும் மருந்துகள் தயாரிப்பதற்கும் இப்பொருள்கள் தேவை. வாணவெடி உற்பத்தியாளர்களுக்கும் மருந்து தயாரிப்பவர்களுக்கும் இப்பொருள்களை விற்பனை செய்வதற்கு 'பெர்மிட்' வழங்கலாம். இப்பொருள்களின் விற்பனைக்கும் விநியோகத்துக்கும் கட்டுப்பாடு விதித்தால் ஓரளவாவது கைக்குண்டு உற்பத்தி குறையுமென எதிர்பார்க்கலாம்.

'டைனமைத்' விற்பனைக்குக் கட்டுப்பாடு உள்ளபோதிலும் இலட்சணக்கணக்கில் அவையும் தவறான கைகளுக்குப் போய்ச் சேர்ந்துவிடுகிறது. வெள்ளைப்பாஷாணம் வெடிஉப்புப் போன்ற பொருள்களுக்குக் கட்டுப்பாடு விதிப்பதுடன் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்கள் தவறான இடங்களுக்குப் போய்ச் சேராமல் சம்பந்தப்பட்டவர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும்.

கட்டுப்பாடு விதிக்கப்பட்ட பொருள்களைப் பெறுவதற்கு 'பெர்மிட்' வழங்கும்போது உண்மையில் அவர்களுக்கு இப்பொருள்கள் தேவைதானா என்பதை நன்கு ஆராய்ந்து வழங்கவேண்டியது அதற்குப் பொறுப்பான ஊழியர்களின் கடமையாகும்.

கைக்குண்டு தயாரிப்பதைத் தடுப்பதில் அரசாங்கத்துக்கும் பொலிசாருக்கும் மட்டுமல்ல நாட்டின் அமைதியிலும் நலனிலும் அக்கறையுடைய ஒவ்வொருவருக்கும் கடமையும் பொறுப்புமுண்டு.

இ. போ. ச.

## டிப்போவில் நாசவேலை சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஞாயிறு இ. போ. ச. பஸ் வண்டிகள் அதிகம் பழுதடைவதைத் தொடர்ந்து சி ஐ டி பொலிசார் நடத்திய விசாரணையில் நாசவேலைகளால் பஸ்வண்டிகள் பழுதடைந்ததாகத் தெரியவந்துள்ளது. எரிபொருள் தாங்கிகளில் மென்மையான றப்பர் பொருட்களைத் திணிப்பதன் மூலம் பஸ்களை இயங்காமல் செய்கின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது.

ஹோமகம, மட்டக்குளிய ஆகிய டிப்போக்களில்தான் இத்தகைய நாசவேலைகள் நடைபெற்றுள்ளதாகத் தெரியவருகிறது. இதுசம்பந்தமாக சில சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஸி பி ஏ)

## பற்றாக்குறை நீங்கும்

கோட்டை, ஞாயிறு சுகாதார அமைச்சு மேலும் 300 தாதிமார்களை மாவட்ட ரீதியாக தேர்ந்தெடுக்கத் தீர்மானித்துள்ளது.

தொகுதி வாரியாக 800 தாதிமார்களை தேர்ந்தெடுக்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவது தெரிந்ததே. அரசாங்க ஆஸ்பத்திரிகளில் தாதிமார்கள் பற்றாக்குறையினால் மேலும் 300 பேரை தேர்ந்தெடுக்க அமைச்சு தீர்மானித்துள்ளது.

## வேலணையில் வெற்றி விழா

வேலணை ஞாயிறு தமிழ்நாட்டில் தி மு க வெற்றிக்காக வேலணையில் விழா கொண்டாடப்பட்டது. உதயசூரியன் சனசமூக நிலையத்தினரால் திரு. மு. சிவராசா தலைமையில் கொண்டாடப்பட்ட இவ்விழாவில் திருவாளர்கள் உ. பரமநாதன், கோ. மகேந்திரன், க. திருநாவுக்கரசு, வி. சந்திரசேகரன், ச. செல்வராசா, கோ. தெய்வேந்திரன் ஆகியோர் பேசினர்.

# மொழிப்பிரச்னை: திரு.பண் கருத்தும் அது மாறியவரல

## செனேட்டர் நடேசன் விளக்குகிறா

மொழிப்பிரச்னை பற்றி மூன்று அத்தியாயங்களை எழுதியிருக்கிறார் செனேட்டர் நடேசன். இதன்மூலம் இப்பிரச்னையின் முக்கியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார். பொதுவாக மொழிப்பிரச்னை, சட்டதிட்டங்கள் பற்றிய மொழி நீதிமன்ற மொழி என்ற மூன்று தலைப்புகளில் இதைப்பற்றி விளக்கி' பல சோஷலிஸ நாடுகளிலும் மொழிப்பிரச்னை எவ்விதம் தீர்க்கப்பட்டுள்ளதென்பதையும் விவரித்திருக்கிறார்;

மொழிப்பிரச்னையைப் பற்றிய 8வது அத்தியாயத்தில் அவர் கூறியதாவது:- அரசியல் அமைப்பு அமைச்சர் வெளியிட்டுள்ள அடிப்படை நகல் தீர்மானங்களில் 11-வது தீர்மானம் சட்டதிட்ட மொழியையும், 12-வது தீர்மானம் அரசாங்க மொழி பற்றியும், 23, 24, 25 தீர்மானங்கள் நீதிமன்றமொழி குறித்தும், 26-வது தீர்மானம் சட்டங்கள் பிரசுரம் பற்றியும் குறிப்பிட்டுள்ளன.

அரசாங்கமொழி பற்றிய 12[ஏ] தீர்மானம், 'ஸ்ரீலங்காவின் அரசாங்க மொழி 1956ம் வருடம் நிறைவேற்றப்பட்ட 33-வது சட்டத்தில் குறிப்பிட்டபடி, சிங்களமாக இருக்கவேண்டும். 12 [பி] தீர்மானம், தமிழ் மொழி உபயோகம் 1958ம் வருட 28-வது சட்டத்தின் தமிழ் மொழி[விசேஷ விதிகளில்] உள்ளபடி இருக்கவேண்டும்' என்றும் கூறுகின்றன.

கூட்டுமுன்னணியினர்தம் விஞ்ஞாபனத்தில், அரசியல் அமைப்பிலே மொழி விஷயமாக என்ன விதிகள் இருக்குமென்று ஒன்றுமே கூறப்படவில்லை" ஆனால் 'அரசாங்க மொழிச் சட்டம், தமிழ் மொழி [விசேஷஉபயோகச்] சட்டம் இவ்விரண்டுக்கும் உட்பட்டு மொழிப் பிரச்னைக்கு ஒருதீர்வுகாணப்படவேண்டுமென்று எல்லா முக்கிய கட்சிகளும் இப்போது ஒப்புக்கொண்டுள்ளன' என்றும் 'ஐக்கிய முன்னணி இவ்விரு சட்டங்களையும் பூரணமாகவும் நியாயமாகவும் நிறைவேற்றும்' என்றும் விஞ்ஞாபனம் தெரிவிக்கின்றது.

மொழிப்பிரச்னைக்கு மேற்குறித்த இருசட்டங்களின் கட்டுக்கோப்புக்குள்ளாக தீர்வு காண வேண்டுமென்று எல்லா முக்கிய கட்சிகளும் ஒப்புக்கொண்டுள்ளதாக விஞ்ஞாபனம் கூறுவதால் மொழிப்பிரச்னை ஒன்று உள்ளதென்பதும், இரண்டாவதாக அதற்கு ஒருதீர்வு காண வேண்டுமென்பதும், மூன்றாவதாக மேற்குறித்த இரு சட்ட கட்டுக் கோப்புக்குள்ளாக அத்தீர்வை காண வேண்டுமென்றும் ஏற்படுகின்றது. இவ்விரு சட்டங்களையும் அரசியல் அமைப்பில் சேர்ப்பது மட்டும் தீர்வுகாண்பதாகாது. அப்படிச் செய்வதாயின், தீர்க்கப்படவேண்டிய மொழிப்பிரச்னை ஒன்று இருக்கிறதென்று கூறுவதில் அர்த்தமில்லை. கூட்டுமுன்னணி அந்த விஞ்ஞாபனத்தை வெளியிட்டசமயத்தில் மேற்குறித்த இரு சட்டங்களும் இருந்திருக்கின்றன. அவை இரண்டினாலும் இப்பிரச்னை தீர்க்கப்பட்டுவிட்டதாயின், விஞ்ஞாபனத்தில், அப்பிரச்னை தீர்க்கப்படவேண்டிய விதத்தை ஏன் கூறியிருக்க வேண்டும்? 11 வருடங்களுக்கு முன் நிறைவேற்றப்பட்ட இவ்விரு சட்டங்களையும் இப்போது அப்படியே அரசியல்திட்டத்தில் சேர்ப்பதாயின், அது அப்பிரச்னையை எப்படித் தீர்ப்பதாகும்? இதுவரை யாரும் அதைத் தீர்க்க எவ்விதமுயற்சியும் எடுக்கவில்லை.

1959ம் வருடம் மார்ச் மாதம் 9ந்திகதி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நீதிமன்றமொழி மசோதா பற்றிப் பேசுகையில் 'ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டுவிட்டதால், மொழி போன்ற அடிப்படையான ஒரு விஷயம் முடிவாகத் தீர்க்கப்பட்டுவிட்டதாக இச்சபையில் யாரும் எழுந்து கூறுவாராயின் அதுபயனற்றபேச்சு என்றார். அச்சமயம் மொழி பற்றிய மேற்குறித்த இரு சட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தன இதனாலேயே. மொழிவிஷயமாக ஒரு பிரச்னைஇருக்கிறதென்றும்' இரு சட்டங்களின் கட்டுக் கோப்புக்குட்பட்டு அதற்கு ஒரு தீர்வுகாண வேண்டுமென்றும் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட வேண்டியதாயிற்று

இந்த மொழிப்பிரச்சனையைப் பரிசிலனை செய்து இதுவரை ஒரு நிபுணர் கமிட்டியோ, அல்லது கமிஷனோ நியமிக்கப்படவில்லை. இது ஒரு பெரிய துரதிஷ்டம். அரசியல்வாதிகளின்விளையாட்டு விஷயமாக இது இருந்துவருகின்றது பல கட்சிகளும், பல தனிப்பட்டவர்களும் பலபல யோசனைகளைக் கூறியுள்ளனர் அரசியல் நிலைமைமாறுவதற்குத் தக்கபடி கருத்துக்களையும் மாற்றிக்கொண்டிருக்கிறார்கள். நிபுணர் கமிட்டியின் யோசனைப்படி ஒருவட்டமேசை மகாநாட்டின் மூலமே இதைத் தீர்த்திருக்கவேண்டும். இப்படி ஒருபோதும் செய்யப்படவில்லை, பலர்பலபல யோசனைகளை கூறியதிலிருந்து இது ஒரு சங்கடமான பிரச்னை என்பது தெளிவு.

### பண்டாரநாயக்காவின் மொழிக் கொள்கை

திரு. பண்டாரநாயக்கா ஒருசமயம் சமஷ்டியேஇதற்குச் சரியான தீர்வு என்று கருதினார். அரசாங்க சபையிலே சிங்களத்தை அரசாங்க மொழியாக்க வேண்டுமென்ற தீர்மானம் விவாதத்துக்கு வந்தபோது அதை அவர் எதிர்த்தார். சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். 1951-ம் வருடம் நடந்த சிங்கள மகாசபை மகாநாட்டிலும் இதைத் தழுவி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 'உடனே சிங்களம் அரசாங்க மொழியாக்கப்பட வேண்டும், இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்கள் தமிழையும் அரசாங்க மொழியாக வேண்டுமென்று வற்புறுத்தினால் தமிழையும் அரசாங்க மொழியாக்குவதில் இச்சபைக்[illegible] ஆட்சே[illegible] இல்லை' என[illegible] அத்தீர்மானம் கூறியது. பிறகு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 1951-ம் வருடம் செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டபோது சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியமாகும் என்று அக்கட்சியினர் வேலைத்திட்டம் தெரிவித்தது.

1954-ம் வருடம் ஏப்ரல் மாதம் களனியில் திரு. பண்டாரநாயக்கா பேசுகையில் தாமும் தமது கட்சியும் சிங்களம் மட்டும் அரசாங்க மொழியாக வேண்டுமென்பதை எதிர்ப்பதாகக் குறிப்பிட்டார். 'அப்சர்வர்' பத்திரிகை 'பண்டாரநாயக்கா சிங்களம் அரசாங்க மொழியாவதை எதிர்க்கிறார்' என்று ஒரு செய்தி வெளியிட்டது இதற்கு திரு. பண்டாரநாயக்கா உடன் அனுப்பிய பதில் 1954 ஏப்ரல் 9-ந் திகதி 'அப்சர்வர்' பத்திரிகையில் வெளியாகியுள்ளது. 'சிங்களம் மட்டும்' என்றே தாம்கூறியதாயும் அப்பத்திரிகைச் செய்தியில் 'மட்டும்' என்ற சொல் விடுபட்டுவிட்டதாகவும் சிங்களமும் தமிழும் நாட்டின் அரசாங்க மொழிகளாவதையே தாமும் தமது கட்சியும் ஆதரிப்பதாகவும் அத்திருத்தத்தி[illegible] குறிப்பிட்டிருக்கிறார்.

1956-ம்வருடம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தனது மொழிக் கொள்கையை மாற்றிக் கொண்டது; நியாயமான தமிழ் உபயோகத்துடன் சிங்களம் அரசாங்க மொழியாக வேண்டுமென்பதே அதன் புதியகொள்கை என்று அறிவிக்கப்பட்டது. 'நியாயமான தமிழ் 'உபயோகம்' என்பதை விளக்கி திரு. பண்டாரநாயக்கா தமது கட்சியின் நிர்வாகக் கமிட்டிக்கு சமர்ப்பித்ததை 'டிரிபியூன்' பத்திரிகை 1956-ம் வருடம் மேமாதம் 10-ம் திகதி வெளியிட்டிருந்தது. அது வருமாறு:

#### சட்டமன்றத்தில்

சிங்களமும் தமிழும் செனேட் சபையிலும் மக்கள் பிரதிநிதிசபையிலும் உபயோகிக்கப்படலாம். எல்லாச் சட்டங்களும் இவ்விரு மொழிகளிலும் வெளியிடப்படும்.

#### நிர்வாகம்

சுப்ரீம் கோர்ட் உள்ளிட்டு எல்லா நீதிமன்ற நிர்வாக

மாங்குளத்தில் சம்பவம்

## கைகலப்பில் ஒருவர் பலி மற்றொருவர் கவலைக்கிடம்

மாங்குளம், ஞாயிறு குடிவெறியில் ஏற்பட்ட கைகலப்பில் ஒருவர் பலியானார். மற்றொருவர் கவலைக்கிடமான நிலையிலுள்ளார். மாங்குளத்தில் இச் சம்பவம் நடைபெற்றது.

நேற்று முன்தினம் நடைபெற்ற இக் கைகலப்பில் 44 வயதான அருள்நாயகம் என்பவரே பலியானவராவர். மற்றும் செல்வராசா என்பவர் பலத்த கத்தி வெட்டுக் காயங்களோடு கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். செல்வராசா மற்றும் மூவருடன் மாங்குளத்திலுள்ள ஒரு தேநீர்க்கடையில் சாரா[illegible] இலிருந்த அருள் எனப்படும் அருள்நாயகம் என்பவருக்கும் செல்வராசாவுக்குமிடையே வாக்குவாதமேற்பட்டுக் கைகலப்பில் முடிந்ததாயும், இக் கைகலப்பில் செல்வராசா கத்தியால் குத்தப்பட்டதாயும் அருள் நாயகம் கைகளாலும் போத்தல்களாலும் தாக்கப்பட்டதாகவும் இச் சம்பவம்பற்றி கூறப்படுகிறது.

சம்பவத்தையறிந்து உடன் ஸ்தலத்திற்கு வந்த மாங்குளம் கிராம சேவையாளர் குத்துப்பட்ட செல்வராசாவை கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்துள்ளார்.

வவுனியாப் பொலிஸார் [illegible] காலஞ் [illegible] அருள் நாயகத்தை வவுனியா ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லும் போது அவர் வழியிலேயே மரணமானார்.

வவுனியா பதில் மாஜிஸ்டிரேட் திரு ரெஜினோல்ட், மன்னார் மற்றும் வவுனியாப் பொலிஸ் அதிகாரிகள் ஸ்தலத்துக்கு வந்து விசாரணைகள் நடத்தினர்.

அருள் நாயகத்தின் மரணம் கொலை எனத் தீர்ப்பளித்த பதில் மாஜிஸ்டிரேட் செல்வராசாவையும் திருநாவுக்கரசு என்பவரையும் றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு புலன்விசாரணையை மேற்கொள்ளுமாறு பொலிஸாரைக் கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டில்

# மின்சக்தி விநியோகத்தை அரசாங்கமே மேற்கொள்ளும்

— மைத்திரி

மஸ்கெலியா, ஞாயிறு "நாட்டின் மின்சக்தியை உற்பத்தி செய்வதில் மட்டுமன்றி மின்சக்தி விநியோகத்தையும் பூரணமாக அரசாங்கம் மேற்கொள்ளும். இதனுல் வரும் வருவாயையும் அரசாங்கமே சேகரிக்கும். இந்த வேலைகளில் சில கடந்த காலங்களில் உள்ளூராட்சி மன்றங்களினுல் செய்யப்பட்டு வந்தன. ஆனுல் இம் மன்றங்கள் இச்சேவையைப் பொது மக்களுக்குச் செவ்வனே செய்யத் தவறிவிட்டன" மஸ்கெலியா ஓயாத் திட்டத்தின் 2-வது கட்ட வேலையை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் நீர்ப்பாசன, மின்சார, தெருஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயகா மேற்கண்டவாறு கூறினுர்.

அவர்மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இந்த 2-வது கட்ட வேலை அநேகமாக 1973-ம் ஆண்டுக்கிடையில் பூர்த்தியாகிவிடும் இந்த வேலையில் பங்குபற்றும் ஒவ்வொருவரும் விசுவாசத்தோடு செயற்பட வேண்டும். நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு நகரத்துக்கும் மின்சக்தியை விநியோகிப்பது மக்கள் அரசாங்கத்தின் நோக்கமாகும். வரலாற்றில் முதல்தடவையாக மின்சக்தி உற்பத்தியில் தற்போது இலங்கை ஸ்தாபனம் ஒன்று ஈடுபட்டுள்ளது. இதனுல் அநேகமான இளைஞருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

இலங்கை மின்சார சபையின் அதிபர் திரு ரி. டபிள்யூ. மெண்டிஸ் மஸ்கெலியா ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. பி. ஜி. ஆரியதிலக உட்படப்பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

# 'இந்த ஆசிரியர்களுக்கும் சேவை நீடிப்பு வழங்கவும்'

உரும்பராய், ஞாயிறு "12-2-71 தொடக்கம் 31-12-71 வரை 55 வயது பூர்த்தியடையும் ஆசிரியர்களுக்கு 31-12-71 வரை சேவைநீடிப்பு வழங்க அரசாங்கம் முன்வந்தமை மிகவும் பாராட்டக்கூடியது. அதேநேரத்தில் 1-1-71 தொடக்கம் 11-2-71 வரையிலான காலத்தில் ஐம்பத்தைந்து வயது பூர்த்தியான ஆசிரியர்களுக்கும் 31-12-71 வரை சேவைநீடிப்பு வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்"

வித்தியாபகுதியை வேண்டும் மேற்கண்ட தீர்மானம் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்க நிர்வாகசபைக் கூட்டத்தில் நிறைவேறியது.

தலைவர் திரு. க. இ. குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அரசாங்கத்தைக் கோரும் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேறின.

அரசாங்கத்தில் இருந்து ஓய்வுபெறும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் மூன்று மாதச் சம்பளம் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படுதல்வேண்டும்.

இளைப்பாற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய பென்சனை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்கம் பலதுறைப்பட்ட ஊழியர்களுக்கும் சேவைநீடிப்பு வழங்கியது போல வித்தியாபகுதியும் ஆசிரியர்களுக்கு சேவை நீடிப்பு வழங்கி ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஆசிரியர்களும் நன்மையடைய வழிசெய்ய வேண்டும்.

வலிகிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தில் பல்லாண்டு காலமாய் தனாதிகாரியாகப் பெரும் பணிபுரிந்து மறைந்த வயாவிளான் திரு. இ. துரைசிங்கத்தினதும், அத்தியார் இந்துக்கல்லூரியின் ஆசிரியராய் இருந்து பணியாற்றி இயற்கையெய்திய திரு. எஸ். கே. சுந்தையாவினதும் ஆன்மசாந்தியின் பொருட்டு மௌனப் பிரார்த்தனை அனுட்டிக்கப்பட்டது.

இந்து சமுத்திரத்தில்

## சோவியத் விஞ்ஞானிகள் ஆராய்கிறார்கள்

மாஸ்கோ, மார்ச் 13 இந்துமா சமுத்திரத்தில் மத்திய சமுத்திர எல்லை வீச்சின் மூன்று பரிமாணத் தோற்றத்தை சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். 'பியோட் லெபடேவ்' ஆய்வுக் கப்பலில் பிரயாணம் செய்யும் இவர்கள் இந்த எல்லை வீச்சின் அளவு அமைப்பு, தோற்றம் பற்றி விபரங்களை தரக்கூடிய படங்களை எடுத்தனர்.

சோவியத் விஞ்ஞானப் பேரவையின் நிலையம் ஒன்றில் உருவாக்கப்பட்ட 'மைகுரோப்-68' கமரா மூலம் இந்தப் படங்களை எடுத்தனர். பல்லாயிரக் கணக்கான கிலோமீட்டர்கள் நீண்டுள்ள அரேப்-இந்திய வீச்செல்லை ஆய்வின் பிரதான இலக்காகும். இந்த வீச்செல்லை பல லட்சக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது என விஞ்ஞானிகள் நிறுவியுள்ளனர்.

இந்துமா சமுத்திரத்தின் கடல்படுக்கையில் ஏற்பட்டு வரும் கடுமையான நிகழ்வுகளை இங்கு அவதானிக்கப்பட்ட கிறவிகளும், சரிவுகளும், இடைவெளிகளும் எடுத்துக்காட்டுகின்றன என்று ஆய்வாளர்களுள் ஒருவரான யுரிஷிடோவ்ஸ்கி சொன்னுர்.


ரூபா 1000/- தொடக்கம்
ரூபா 5000/- வரை சேமிப்புக்கு
வருடம் 7 சத வீத வட்டி
கொடுக்கப்படும்
இச் சேமிப்பை 7 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.
தம்பி அன் கோ.,
284, காங்கேசன்துறை வீதி :: வண்ணார்பண்ணை.


# இன்றைய பலன்

பங்குனி மாதம் 1-ம் திகதி (15-3-71)

மேஷம்- வியாபாரத்தில் நஷ்டத்திற்கு இடமுண்டு தொழில்துறையில் தொல்லைகள் தோன்றக்கூடும்.

ரிஷபம்- எதிர்பாராத பிரயாணம் இன்று ஏற்படும். முன்னுள் ஆசிரியர் ஒருவரின் அறிமுகம் உங்களுக்கு வசதிகளைத் தேடித்தரும்.

மிதுனம்- வேண்டாத தொடர்புகளால் வேதனை தாக்கும். அவசரக்கோலம் உங்களை ஆபத்தில் மாட்டி வைக்கும்.

கடகம்- சகோதர பாசம் தலை தூக்கிநிற்கும். பிதாவழிச் சுகம் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கு இடமுண்டு.

சிம்மம்- பாதையில் பழுதுண்டு. பகைவர்கள் காத்திருப்பர். உணவு விடயத்தில் கவனம் வேண்டும்.

கன்னி- இனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும் எதற்கும் மனத்திடம் வேண்டும்.

துலாம்- அன்பர்களின் வருகையால் வாழ்க்கையில் புதிய உற்சாகம் பிறக்கும். வாகனச் சொந்தக்காரர்களுக்கு நன்று.

விருச்சிகம்- துன்பத்தின் ரேகைகள் படரும். எதற்கெடுத்தாலும் சிறிவிழுவீர்கள். குடும்பதிலும் உடல் நலம் குன்றும்.

தனுசு- தாய்வழியால் பெருமைகள் சேரும், தனத்துடன் வாழ்வும் கிடைக்கும். எதிரிகள் உங்களை வரவேற்பார்கள்.

மகரம்- சிக்கல்கள் வாழ்க்கையில் பதிர்போடும் குடும்பத்தில் சிறு தொல்லைகள் தோன்றிமறையும். பணவிடயத்தில் கவனம் செலுத்தவும்.

கும்பம்- வேவுக்கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர் பெரியவர்களுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

மீனம்- எதிர்பார்த்த நல்ல திருப்பம் இன்று ஏற்பட முடியும். குடும்ப விவகாரங்களில் பிணைப்புக்கள் இருக்கும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

திங்கள் 15—3—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை. 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மார்க்கெட் டவை.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-35 பெண்ணுலகம், 7-00 ஞானமஞ்சரி, 7-15 சித்திரம், 7-45 வாத்தியஇசை, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9 30 இசைச்சித்திரம், 10-00 இராகம், தானம், பல்லவி, 10-30 செய்தி அறிக்கை...

# கிரிதாரி பிரசாத் மீண்டும் யாழ். வருகிறுர்

மாவிட்டபுரம், ஞாயிறு கோயம்புத்தூர் முன்னுள் நீதிபதியும் காந்தீயப் பேராசிரியரும் சிறந்த பேச்சாளருமான அருட்பா அரசு திரு நா. கிரிதாரி பிரசாத் இம்மாதம் 15-ம் திகதி யாழ்ப்பாணம் வரவிருக்கிறுர்.

இலங்கையிலுள்ள பலசங்கங்கள் விடுத்த அழைப்பின் பேரில் இங்குவரும் இவர் யாழ்ப்பாணம், வவனியா திருமலை, மட்டக்களப்பு, மலைநாடு ஆகிய இடங்களில் சமயச் சொற்பொழிவுகள் நிகழ்த்துவார்.

15ம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரும் திரு பிரசாத் 22ம் திகதிவரை யாழ்ப்பாணத்தில் தங்கி பல இடங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தியபின் 23ம் திகதி வவுனியா செல்வார். 24-ம் திகதி திருமலைக்கும் 25-ம் திகதி மட்டக்களப்புக்கும் 26ம் திகதி பதுளைக்கும் 27ம் திகதி அட்டனுக்கும், 28-ம் திகதி நாவலப்பிட்டிக்கும், 29ம் திகதி கண்டிக்கும் 30-ம் திகதி மாத்தளைக்கும், 31-ம் திகதி கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் விவேகானந்த சபைக்கும் விஜயம் செய்து மீண்டும் யாழ்ப்பாணம் வந்து 6-ம் திகதி தாயகம் திரும்புவார்.

இதுவரைபல கீழ்த்திசை நாடுகளுக்கும் சென்று சமரச சன்மார்க்க கொள்கைகளையும் காந்திய தத்துவங்களையும் பரப்பி வந்துள்ளார்.

இவரது விஜயத்துக்கான ஏற்பாடுகளை சைவப் பெரியார் திரு மு. வைரமுத்துவும் திருமலையைச் சேர்ந்த தியாகி கோ. இராஜகோபால் தெல்லிப்பழையைச் சேர்ந்த டாக்டர் தி. கனகரத்தினம் ஆகியோரும் செய்து வருகின்றனர்.

## பிளாஸ்டிக்கில் செயற்கை இருதயம்

லண்டன், மார்ச் 13 விஞேதமான புதிய பொருட்கள் முதன் முதலில் பாவனைக்கு வரும் பொழுது அவற்றின் மீது ஓரளவு அவநம்பிக்கை ஏற்படுவது மனித இயல்பு. 1865ம் ஆண்டில் அலக்ஸான்டர் பாக்ஸ் என்ற ஆங்கில விஞ்ஞானி புதியதொரு செயற்கைப் பொருளை உருவாக்கிய போது மக்களிடமிருந்து அதற்கு நல்வரவேற்புக் கிடைக்கவில்லை. ஆனுல் இப்பொருள் பின்னெரு காலத்தில் புரட்சிகரமான செயற்கைப் பொருளாக திகழுமென்ருே கோடிக்கணக்கான பவுன்களை நாட்டுக்கு வருமானமாக தேடிக்கொடுக்கும் என்ருே அலக்ஸான்டர் பாக்ஸ்எண்ணியிருக்கவில்லை.

இவர் கண்டு பிடித்த பொருள்தான் பிளாஸ்டிக். இது ஆரம்பத்தில் பொம்மைகளுக்கும் மற்றும் சில விளையாட்டுப் பொருட்களுக்கும் பாவிக்கப்பட்டதாயினும் இரண்டாம் உலகயுத்தத்தின் பின்னர் இதன் பாவனையில் புதிய திருப்பம் ஒன்று ஏற்பட்டது.

இன்றைய நவீன உற்பத்தித் துறையில் பிளாஸ்டிக் ஒரு நுட்பமான செயற்கைப் பொருளாகக் கருதப்படுகிறது பிரிட்டிஷ் மோட்டார் உற்பத்தித்துறையில் மட்டும் ஆண்டு தோறும் 40 ஆயிரம் தொன் பிளாஸ்டிக் பயன்படுத்தப்படுகிறது. இதன் பெறுமதி 30 கோடி பவுண்களாகும். சாதாரணமான கார் ஒன்றில் 42 ருத்தல் எடையுள்ள பிளாஸ்டிக் உள்ளதாம்.

பிரிட்டனின் மாபெரும் உல்லாசக் கப்பலான இரண்டாவது குவீன் எலிஸபெத் கப்பலில் பிளாஸ்டிக் பெருமளவு பாவிக்கப்பட்டிருக்கிறது. இக் கப்பலிலுள்ள 300 குளிக்கும் தொட்டிகள், 10,000 நாற்காலிகள், மின்சாரக் கம்பிகள் எல்லாமே பிளாஸ்டிக்கினுலானவை.

வீடுகள் கட்டுவதற்கு இன்று விரும்பிப் பாவிக்கப்படுவது பிளாஸ்டிக் கான்கிரீட். சாதாரண காங்கிரீட் உறைந்து கடினமாக 28 நாட்கள் எடுக்கும். ஆனுல் பிளாஸ்டிக் கான்கிறீட் 30 நிமிடங்களில் அதே விதத உறுதியைப் பெற்று விடுகிறது.

இவற்றை எல்லாம்விட வைத்திய விஞ்ஞானத்திற்கு மிகவும் பயனளிக்கத்தக்க புதுமையான ஆராய்ச்சியில் இப்பொழுது பிளாஸ்டிக் ஈடுபடுத்தப் பட்டுள்ளது. இதுதான் பிளாஸ்டிக்கினுலான செயற்கை மனித இருதயம். இந்த நுண்ணிய பிளாஸ்டிக் இருதயத்தை அமைக்கும் முயற்சியில் பிரிட்டிஷ் பொறியியல் விஞ்ஞானிகள் வெற்றிகண்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது. இந்த இருதயத்தை அமைத்து சத்திர சிகிச்சை மூலம் மனிதனின் பழுதுபட்ட இருதயத்திற்குப் பதிலாக இணைப்பது எதிர்காலத்தில் சாத்தியமாகலாமென நம்பப்படுகிறது.

## தமிழ் மன்றம் பாராட்டு

சுழிபுரம், ஞாயிறு "இடைக்கால பொதுத் தேர்தலில் பூரண பெரும்பான்மை பலத்தைக் கொண்டு ஸ்திரமான இடத்தை நிலைநாட்டியுள்ள தங்கள் திறமையை பெருமையை பாராட்டி போற்றுகின்றேம். தங்கள் அரசு பல முற்போக்கான காரியங்களை செய்து உலகத் தமிழ் மக்கள் உய்ய வழிகாட்டவேண்டும்" இவ்வாறு தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு வழக்கம்பரை தமிழ் மன்றத்தினர் அனுப்பி வைத்துள்ள பாராட்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்மொழி வாழவும் வளரவும் வாய்ப்புகளை ஏற்படுத்தும்படியும் அவர்கள் கேட்டுள்ளனர்.

தொ. ச. ஊழியருக்கு

## பல்கலைக்கழக படிப்பு

கோட்டை, ஞாயிறு தொழிற்சங்கங்களிலுள்ள 240 ஊழியர்களுக்கு ஒருவருடம் பல்கலைக்கழகப்படிப்பு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 20 ம் திகதி பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா இந்தப் பிரிவை கொழும்பு ரேயல் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கவுள்ளார்.

மேற்படி தொழிற்சங்க ஊழியர்களுக்கான பிரிவு இலங்கையின் 4 பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் மேற்கொள்ளப்பட்டது. இந்தப்படிப்பு முடிவடைந்ததும் டிப்புளோமா பட்டம் இவர்களுக்கு வழங்கப்படும்.

## ச தே. வழக்கறிஞர் கண்டனம்

பிரஸல்ஸ் (டாஸ்) மார்ச் 18 பிரஸல்ஸில் கூடிய சர்வதேச ஜனநாயக வழக்கறிஞர் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், அரபு பிரதேசங்களை இஸ்ரவேல் ஆக்கிரமிப்பு செய்தமையை வன்மையாகக் கண்டித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுச்சாம்பியனாக உரும்பராய் கணேசா

உரும்பராய், ஞாயிறு வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி பிரிவினரால் நடாத்தப்பட்டுவரும் விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் உரும்பராய் கணேசா விளையாட்டுக்கழகமும் புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகமும் மோதிக் கொண்டன.

போட்டி தொடங்கி இரு கோஷ்டிகளும் விட்டுக் கொடுக்காமல் விளையாடிக் கொண்டிருந்த போதிலும் இடைவேளைவரை இரு கோஷ்டிகளும் கோல்கள் எதுவும் போடவில்லை. இடைவேளையின்பின் கணேசா கோஷ்டியைச் சேர்ந்த இடதுகரை வீரர் சண்முகராசா எதிர்க்கோஷ்டியின் பலத்த எதிர்ப்புக்கிடையில் ஒரு கோலைப்போட்டு தமது கோஷ்டிக்கு வெற்றிதேடிக் கொடுத்தார்.

போட்டி முடிவில் உரும்பராய் கோஷ்டி புத்தூர் கோஷ்டியை 1—0 கோலால் வெற்றிபெற்று பிரிவு சாம்பியன் ஆனது. புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு எஸ். மார்க்கண்டு மத்தியஸ்தம் வகித்தார்.

## வெற்றிக் கேடயம் பெற்றது

யாழ்ப்பாணம், திங்கள் யாழ் பரமேஸ்வராக் கல்லூரியில் இம்மாதம் 10-ம் திகதி நடத்தப்பட்ட தனியார் வட்டாரக் கனிஷ்ட பாடசாலை மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொண்ட 26 பாடசாலைகளின் இறுதிப்போட்டியில் தாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலை மாணவ மாணவிகள் அநேக விளையாட்டுக்களில் முதலிடத்தைப் பெற்றுவெற்றிக் கிண்ணங்களைப் பெற்றதோடு அநேக புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கேடயத்தையும் தட்டிக்கொண்டது. இப்பாடசாலை சென்ற ஆண்டும் முதலிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## மகாவித்தியாலயம்

தாவடி, ஞாயிறு "சகல வசதிகளும் பொருந்தியிருப்பதாலும் தாவடிக்கும் அண்மையில் இருப்பதாலும் விஞ்ஞான ஆய்வுகூடம் விரைவில் அமையவிருப்பதனாலும் மகாவித்தியாலயத்திற்கு மிகவும் பொருத்தமானது இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலை. இதையே மகா வித்தியாலயமாக்குதல் சாலவும் சிறப்பு.

தாவடி சனசமூகநிலையத்தின் கூட்டத்தில் மேற்படி தீர்மானமொன்றை நிறைவேற்றி கல்விமந்திரிக்கும் இதுபற்றி அறிவிப்பதெனவும் தெரிவித்துள்ளனர்.

திரு. சி. செல்வரத்தினத்தின் தலைமையில் திரு. க. கனகநாயகத்தின் தமிழ் வேதபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாகியது.

## ஒரே ஆசிரியர்

ஊரதீவு, ஞாயிறு நூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் கல்வி பயிலும் ஊரதீவு திருநாவுக்கரசு வித்தியாசாலையில் ஒரே ஒரு ஆசிரியரே கல்வி பயிற்றுகிறார். இதன் காரணமாகத் தமது பிள்ளைகளின் கல்வித்தரம் பாதிக்கப்படுவதாகப் பெற்றோர் பெரும் அதிருப்தி தெரிவிக்கின்றனர். இது பற்றி சம்பந்தப்பட்டோருக்கு அறிவித்தும் எதுவித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லையாம்.

கல்விக்கு

## ஐந்தரைக் கோடி ரூபா செலவு

கம்புறுபிட்டியா, திங்கள் 'நாம் இன்று வானவெளிப் பிரயாணத்தை மேற்கொள்ளும் காலத்தில் வாழ்கிறோம். எனவே எமது கிராமப்புறத்துப் பிள்ளைகளுக்கு நல்ல விஞ்ஞானக் கல்வியைப் போதிக்க வேண்டும். அவ்வாறு செய்தால்தான் நாம் முன்னேற்றமடைந்துள்ள நாடுகளுடன் ஒத்து வாழ முடியும்.

கரகொடை உயன்கொட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றுகையில் கல்வியமைச்சர் திரு. பி. தெஹநாயக இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் மக்கள் அரசாங்கம் கொழும்பிலுள்ள றோயல் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கும் கிராமப்புறத்திலுள்ள பாடசாலையொன்றில் படிக்கும் மாணவர்களுக்கும் ஒரேவிதமான கல்வியைப் போதிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. அரசாங்கம் மாணவர்களுக்காக வருடாவருடம் ஐந்தரைக் கோடி ரூபாவுக்கும் அதிகமாகச் செலவு செய்கிறது எனக் குறிப்பிட்டார்.

"நாரந்தனை

## மின்சாரக்கடனை உடன் வழங்குக"

வேலணை, ஞாயிறு நாரந்தனைக் கிராமச்சபையின் மின்சார விநியோகத் திட்டத்திற்கான கடனை உடனேவழங்க நடவடிக்கை எடுக்குமாறு திரு. கா. பொ. இரத்தினம் எம். பி. அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவிடம் கோரியுள்ளார்.

1967-ல் கடன் எடுக்க முயன்ற இக்கிராமச்சபைக்கு இன்னும் கடன்கொடுபடவில்லையென்றும் நான்கு வருடங்களாக மின்சாரத்தை எதிர்பார்த்திருக்கும் நாரந்தனை மக்களின் ஏமாற்றத்தைத் தவிர்க்கும்படியும் எம். பி. தமது கடிதத்தில் கேட்டுள்ளார்.

## காரியாதிகாரிகளுக்கு கூடிய அதிகாரம்

கோட்டை, ஞாயிறு காரியாதிகாரிகளுக்குக் கூடிய நிர்வாக அதிகாரம் வழங்கப்படவேண்டும் என உள்ளூராட்சி மன்ற பொது நிர்வாக அமைச்சினால் கச்சேரி வேலைகளைப் பரவலாக்குவதற்கு நியமிக்கப்பட்ட கமிட்டி மேற்கண்டவாறு சிபார்சுசெய்துள்ளது. கமிட்டியின் இச்சிபார்சை அமைச்சு ஏற்றுள்ளது எனவும் தகவல் இலாகா நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

## ஆய்வு கூடம்

கோட்டை, ஞாயிறு உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்ன 20 லட்சம் ரூபா செலவில் சந்தைப்படுத்தும் இலாகாவுக்கு அறுவப்படவிருக்கும் பழங்கள், மரக்கறி ஆகியவற்றைப் பதனிடுவது குறித்து ஆய்வு நடாத்தும் ஆய்வு கூடத்துக்கு இம்மாதம் 21-ம் திகதி அடிக்கல் நாட்டுவார்.

## எம். ஜி. ஆர். கழகம் வாழ்த்து

சுழிபுரம் ஞாயிறு அண்ணா விதைத்த விதை நன்கு வளர்ச்சியடைந்து பெரும் விருட்சமாக வளர்ந்துள்ளது தி. மு. க. வின் வெற்றி தமிழ்பேசும் மக்களாகிய நம்மவரின் வெற்றியாகும். கடல்கடந்துவாழும் தமிழ் மக்களாகிய நாம் பெருமையும் பெரும் பூரிப்பும் அடைகின்றோம். இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் தமிழக அரசை மனதில் கொண்டு தமிழ் மக்களின் துயர்துடைக்க முன்வந்திடும் தந்தை செல்வாவின் தலைமை ஏற்று விடுதலை காணவேண்டும். நல்லவர்களாலும் பெரும் வல்லவர்களாலும் அமைக்கப்பட்ட தி. மு. க. இயக்கம் மேலும் வளரவேண்டும் அதற்காக யாவரும் உழைக்க வேண்டும்! இவ்வாறு சாத்தை எம். ஜி. ஆர். மன்றத்தினர் நடாத்திய தமிழக தி. மு. க. வெற்றி விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய பண்டிதர் ம. இராசகுரு குறிப்பிட்டார்.

விழாவுக்கு மன்றத் தலைவர் திரு க. நாகரத்தினம் தலைமை வகித்தார். மற்றும்பலர் பேசினர். தமிழக அமைச்சருக்கு வாழ்த்தும் பாராட்டும் அனுப்பப்பட்டது.

## இளைஞர் சங்கம்

மாவிட்டபுரம், ஞாயிறு காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியில் இந்து இளைஞர் சங்கம் ஒன்றை ஆசிரியர் ப. சுப்பையா அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அபிவிருத்தி வேலைகளுக்கு

## ரூபா 2 லட்சம் வழங்கப்படும்

கோட்டை ஞாயிறு உள்ளூராட்சி மன்றங்கள் தங்கள் பகுதிகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளுவதற்கு ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்துக்கும் ரூபா 200 000 வழங்கப்படவிருக்கிறது.

உள்ளூராட்சிமன்றபொது நிர்வாக உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்காவுக்கு உள்ளூராட்சிமன்ற அபிவிருத்தி வேலைகளுக்கு நிதியுதவி அளிக்கவேண்டுமெனக்கோரி பொதுமக்களாலும் உள்ளூராட்சிமன்ற நிர்வாகிகளாலும் அனுப்பப்பட்ட பல தீர்மானங்களையடுத்தே மேற்படி நடவடிக்கையெடுக்கப்படவிருக்கிறது.

காரைநகரில்

## மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு காரைநகர் தோப்புக்காடு மேற்கு கடற்தொழிலாளரின் நலனைமுன்னிட்டு மீன்பிடிக்கூட்டுறவுச்சங்கம்ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பகுதி மீன்பிடிப் பரிசோதகர் திரு ஆர். பிரான்சிஸ் தலைமையில் யாழ். மேற்கு தீவுப் பகுதிக் கூட்டுறவு அபிவிருத்தி மீன்பிடிப்பரிசோதகர் திரு. க. தேவராஜா கலந்து கொண்டு சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சே. சுப்பிரமணியம் உபதலைவர்: எஸ். கந்தையா செயலாளர்: எஸ். சுப்பிரமணியம் பொருளாளர்: எம். கந்தவேல். (மாவி. நி)

இந்திய முன்மாதிரியை

# இலங்கைத் தமிழரும் பின்பற்ற வேண்டும்

## ஆனந்தசங்கரி சொல்கிறார்

யாழ்ப்பாணம், திங்கள் நடந்து முடிந்த இந்தியப் பொதுத் தேர்தல் முடிவுகள் பாரத நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, அயல் நாட்டவர்களான எங்களுக்கும் பெருமகிழ்ச்சி தருவதாக அமைந்துள்ளது முதலாளித்துவத்தைச்சாடி முற்போக்கு வாதிகளுக்கு-சோஷலிச வாதிகளுக்கு அதிகாரத்தை அளித்திருக்கின்றனர் பாரத மக்கள் இதில் முக்கியமாக எங்கள் கவனத்தை ஈர்ப்பது என்னவெனில் பாரதத்தில் சிறுபான்மை இனத்தவரான தமிழ்நாட்டு மக்கள் இந்திரா காங்கிரஸோடு உறவு பூண்ட தி. மு. கவினரை முன்னெப்போதும் தமிழக அரசு கண்டிராத பெரும்பான்மைப் பலத்துடன் அரியணையில் அமர்ந்திருப்பது தான்.

தலைவர்தமிழரா அல்லவா என்பது முக்கியமல்ல. நாட்டைச் சோஷலிசப் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய பொருளாதார ரீதியில் நாட்டை முன்னேற்றக் கூடிய ஒரு தலைமையைத் தான் நாட்டு மக்கள் இன, மத பேதமின்றி ஆதரிக்க வேண்டுமென்ற நல்லதொரு பாடத்தை உலகின் முதன்மையான ஜனநாயகநாடான இந்திய நாட்டுமக்கள் குறிப்பாகத் தமிழ் நாட்டினர் உலகத்திற்கே புகட்டியுள்ளனர்.

இவ்வரிய பாடத்தினை ஈழநாட்டிலுள்ள தமிழர்களும் ஏற்று சோஷலிசப்பாதையில் இந்நாட்டை வழிநடத்த முன்வந்துள்ளோர்க்கு ஒத்துழைப்பு நல்க முன்வர வேண்டும்.

இவ்வாறு கிளிநொச்சி எம். பி. திரு ஆனந்தசங்கரி இந்திய தேர்தல்பற்றி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## சிறைச்சாலையில் வள்ளுவர் குருபூசை

யாழ்ப்பாணம், திங்கள் 'உலக மக்கள் அனைவருக்கும் வாழ்க்கையின் வழிகாட்டி நூலாக அமைந்தது திருக்குறள். வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டுமானால் திருக்குறளைப் படிக்க வேண்டும். படித்தால் மட்டும் போதாது. அதனை விளங்கி அதற்கேற்ற வகையில் நடக்க வேண்டும்' என சைவப்புலவர் திரு. வ கந்தசாமி யாழ்ப்பாணம் அரசினர் சிறைச்சாலையிலுள்ள முருகன் ஆலயத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் குருபூசையின் போது பேசுகையில் கூறினார். விசேஷ பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

உலக சந்தையில்

## சீனிவிலை அதிகரிப்பு

கோட்டை, ஞாயிறு உலகசந்தையில் சீனியின் விலை தொன் ஒன்றுக்கு 70 பவுண்ஸ் அதிகரித்துள்ளது ஒரு தொன் 47 பவுண்ஸாக இருந்த சீனி இப்போது மேலும் 23 பவுண்களால் அதிகரித்துள்ளது. எனினும் சீனியின் விலையில் எதுவித மாற்றமும் செய்யப்படமாட்டாதென அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

விரைவில்

## இரத்தினக்கல் கூட்டுஸ்தாபனம் செயற்படும்

கோட்டை, ஞாயிறு அடுத்த 3 மாதங்களுக்கிடையில் நீண்டகாலமாக நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்த இரத்தினக்கல் கூட்டுஸ்தாபனம் நிறுவப்படவிருக்கிறது.

நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா இக் கூட்டுஸ்தாபத்தின் அதிகாரிகள் சபைபற்றி விரைவில் வெளியிடவுள்ளார் என நீதியமைச்சைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டுஸ்தாபனம் செயல்பட ஆரம்பித்ததும் அதன் ஏல விற்பனை நிலையத்தில் முதல் வாரத்தில் இரண்டரைக்கோடி ரூபா பெறுமதியான இரத்தினக் கற்கள் ஏலத்தில் விற்கப்படும் எனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## கத்தியால் வெட்டி படுகொலை!

காலி, ஞாயிறு கத்தியால் வெட்டிப் படுகொலைக்குள்ளானார், உடகம பொலிஸ் பகுதியைச் சேர்ந்த டி. கே. பொடி அப்புசாமி என்பவர். சந்தேக நபர்கள் இருவர் நாகொட பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார்கள். இவர்கள் உடகம பொலிஸ் நிலையத்திடம் கையளிக்கப்பட்டனர்.

காலி மாவட்ட நீதிபதி மாஜிஸ்திரேட் விசாரணை நடாத்தினார். இம்மாதம் 22-ம் திகதிவரை சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

இக்கொலை சம்பந்தமாக பொலிசார் புலன்விசாரணை செய்கின்றனர்.

## பகவான் சாயி சமித்தி நிர்வாகிகள்

கொழும்பு, ஞாயிறு பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா சமித்தியின் வருடாந்தக் கூட்டம் கொழும்பு ருத்திர மாவத்தையிலுள்ள சிவானந்தா நிலையத்தில் நடைபெற்றது. திரு. வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சமித்தியின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: டாக்டர் ரி. நல்லநாதன், உபதலைவர்: திரு. சி. பாலசிங்கம், காரியதரிசி: திரு கே தியாகராசா இணைக்காரியதரிசி: திரு. எம். கிருஷ்ணபிள்ளை, தனாதிகாரி: திரு. ரி. வேதீஸ்வரநாதன்.

## ஊர்காவற்றுறையில் நிறுவுக

யாழ்ப்பாணம், திங்கள் வேலணையில் நிறுவப்பட்டிருக்கும் நெடுஞ்சாலைப் பகுதிப் பொறியியல் பிரிவை ஊர்காவற்றுறையில் நிறுவுமாறு. காரைநகர் தெற்கு அனலைதீவு காரைநகர் வடக்கு ஆகிய கிராமசபைகளின் தலைவர்கள் நெடுஞ்சாலைப் பகுதி அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயக்காவைக் கோரியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரசியல் நிர்ணய சபையில் ஜே. ஆர். திருத்தம் தோல்வி!

கொழும்பு, ஞாயிறு எதிர்க்கட்சித்தலைவர் திரு ஜே. ஆர் ஜெயவர்த்தன இன்றைய அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் கொண்டு வந்த பிரேரணை தோல்வியடைந்தது. தமிழரசுக்கட்சியும் இப்பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தது.

ஸ்ரீலங்கா குடியரசு சம்பந்தமாக அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் பிரேரணைக்கு திருத்தப் பிரேரணையாக திரு. ஜே. ஆர். இதனைக் கொண்டு வந்தார்.

'ஸ்ரீலங்கா சுதந்திரமான இறைமை கொண்ட தாளுதிக்கமுள்ள ஓர் குடியரசு ஆக வேண்டும்' என்ற டாக்டர் கொல்வினின் பிரேரணைக்கு ஜே ஆர். சமர்ப்பித்த திருத்தப்பிரேரணை வருமாறு: 'ஸ்ரீலங்கா சுதந்திரமான இறைமை கொண்ட தன்னுரிமைகளுள்ள சோஷலிஸ ஜனநாயகக் குடியரசு ஆக வேண்டும்'

யு. என். பி. உறுப்பினர்களுடன் தமிழரசு எம். பிக்களும் ஜே. ஆரின் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

## 'மொழி மத உரிமை பாதுகாப்பு: இந்த நம்பிக்கையில் தான் வந்தோம்'

-வி: என். நவரத்தினம்

கொழும்பு, ஞாயிறு தமிழ்பேசும் மக்களின் மொழி உரிமையும், மத உரிமையும் பாதுகாக்கப்படுமென்ற நம்பிக்கையுடன் தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணயசபை கூட்டத்தில் கலந்து கொள்கிறதென்று சாவகச்சேரி எம். பி. திரு. வி என். நவரத்தினம் இன்று அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. வி. என். நவரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது: "அரசியலமைப்புச் சட்டம் மாற்றப்படவேண்டுமென்ற கருத்தையே தமிழரசுக்கட்சி கொண்டுள்ளது. ஆனால் தமிழரசுக்கட்சி அந்த அரசியல் சட்டம் எப்படி மாற்றப்படவேண்டுமென்று கொண்டுள்ள அடிப்படைக்கொள்கையைப் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொள்ள ஏற்கா விட்டாலென்ன. இன, மத, சாதி வேறுபாடில்லாமல் இந்நாட்டில் வாழும் எல்லாரையும் பாதுகாக்கக்கூடிய ஓர் அரசியலமைப்பு வேண்டுமென்பதையே வற்புறுத்துகிறது. தமிழரசுக்கட்சியின் அடிப்படைத் தீர்மானத்தைப் பெரும்பான்மை மக்கள் ஏற்காவிட்டாலும் தமிழ்மக்களின் அபிலாஷைகளை விஷயங்களை அது கருத்திற் கொண்டுள்ளது.

சிங்கள, தமிழ் மக்கள் உரிமையோடும், கௌரவத்துடனும் வாழ வழிசெய்வதே தமது நோக்கமென்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியன பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தியுள்ளன. பண்டாரநாயக்காவும், திருமதி சிறிமா பண்டாரநாயக்காவும் பகிரங்கமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

தமிழரசுத் தலைவர்கள் சமீபத்தில் பிரதமருடன் நடாத்திய சந்திப்பு தமிழ் பேசும் மக்களின் மொழி, மத உரிமைகளைப் புதிய அரசியலமைப்பு பாதுகாக்குமென்ற நம்பிக்கையை ஊட்டியுள்ளது. அந்த நம்பிக்கையுடன்தான் தமிழரசுக்கட்சி இக்கூட்டத்தில் கலந்துகொள்கிறது.

## எண்ணெய் விலையேற்றத்திற்கு அரபுநாடுகள் காரணமல்ல

—வர்த்தக அமைச்சர்

கொழும்பு, ஞாயிறு சுத்திகரிக்கப்படாத பெற்ரோல் எண்ணெயை இலங்கைக்குக் குறைந்த விலையில் வழங்க ஐக்கிய அரபுக்குடியரசு முன்வந்துள்ளதென உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின பத்திரிகை நிருபர்களிடம் இன்று தெரிவித்தார்.

இது இலங்கைக்குப் பெருமளவில் இலாபகரமாக இருக்குமெனவும், இலங்கைக்கு உதவுவதில் எகிப்து எதிர்பார்த்ததிற்கு மேலாக அதிக அக்கறைகொண்டுள்ளதாக இருக்கிறதெனக் குறிப்பிட்ட அமைச்சர் சமீபத்தில் பெற்றோலியம் பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டதற்கு அரபு நாடுகளைக் குறைகூறமுடியாதெனக் கூறினார். தாங்கள் உற்பத்திசெய்யும் பொருட்களுக்கு அதிக விலை வேண்டுமென்று மாத்திரமே அவர்கள் கூறினார்களென்றும், ஆனால் இதனை அமெரிக்க, பிரிட்டிஷ் கம்பனிகள் பாவனையாளர் மேல் சுமத்தி விட்டார்களென்றும் அவர் தெரிவித்தார். சிபிஏ

## மாபெரும் புரட்சிக்கு ஒன்றுபட்டுவிட்டார்கள்

— இந்திரா

புதுடில்லி, மார்ச் 14 மக்கள் மாபெரும் புரட்சியொன்றுக்கு ஒன்று பட்டுவிட்டார்கள் என்பதை இத்தேர்தல் நிரூபித்து விட்டது என்று இன்று பிரதமர் திருமதி இந்திராகாந்தி கூறினார்.

டில்லி பிரதேச காங்கிரஸ் ஊழியர் கூட்டமொன்றில் அவர் இன்று உரைநிகழ்த்தினார்.

அவர் மேலும்பேசுகையில் கூறியதாவது:-

"பெருகிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக்கட்டுவதற்கான மிகப்பெரிய கடமை எதிர் நோக்குகிறது. இதற்காக முழுமூச்சுடன் போரடுவதற்குத்தயாராகிவிட்டோம்கோடிக்கணக்கான ஏழை மக்கள் நடத்திய போராட்டத்துக்கு இப்போது நியாயம்கிடைத்திருக்கிறது. விவசாயம் தொழில் ஆகியவற்றில் உற்பத்தி வழிகளைப் பெருக்குவதில் எல்லாவிதமுயற்சிகளையும் மேற்கொள்வோம்"

— —

### நக்ஸலைட் தலைவர் மரணம்

கல்கத்தா, மார் 14 மேற்குவங்க நக்ஸல்பாரித் தலைவர் திரு. சுசீல்ராய் சவுத்திரி காலமானார் இவருக்கு வயது 60 தலைமறைவாக இருந்[illegible] இவர் மரணமானார் இவரது சடலம் நகரத்து[illegible] கொண்டு வரப்பட்டது.

### துரையப்பா

(1ம் பக்கத்தொடர்ச்சி)

றும் கேட்பதில்லையென்றும் உயர் அதிகாரியொருவர் கூறினார்.

இணுவில் பகுதியில் யாழ் தேவ் பெட்டியொன்று எரிந்த சம்பவத்தை யொட்டி பொலிஸ் கோஷ்டியினர் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றனர்.

இச்சம்பவத்திற்கும், துரையப்பாவின் கார் எரிக்கப்பட்ட சம்பவத்திற்கும் தொடர்பிருக்கின்றதா என்பது பற்றியும் பொலிஸ் கோஷ்டியினர் விசாரணை செய்து வருகின்றனர்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" [illegible] ராஜ்பிளாட்டில் அச்சுப் பிரசுரிக்கப்படுவதாக யாழ்ப்பாணம் [illegible] 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 15-ந் திகதி வெளியிடப்பட்டது.

### 'ஜனநாயகத்தில் காமராஜருக்கு நம்பிக்கையிருந்தால்..'

சென்னை, மார்ச் 14 உண்மையான ஜனநாயகத்தில் காமராஜருக்கு நம்பிக்கையிருக்குமானால் மக்களின் தீர்ப்பை மதித்து இந்திரா காங்கிரஸுக்கு ஒத்துழைப்பு அளிக்கும்படி தமது கட்சிக்காரருக்குக் கூறத் தயங்கக்கூடாதென்று தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. ஆர் வி. சாமிநாதன் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் இந்திரா காங்கிரஸை எப்படிப் பலப்படுத்துவதென்பது குறித்து பிரதமரிடமும், காங்கிரஸ் பிரமுகர்களிடமும் தெரிவிக்கப்போவதாக திரு. ஆர். வி. சாமிநாதன் தெரிவித்தார்.

மக்கள் கமிட்டிக்கு

## தகுதியானவரின் பெயர்களை கோருகிறார் பண்டிதர்

யாழ்ப்பாணம், சனி ஊர்காவற்றுறைத் தொகுதியில் நிறுவப்படவிருக்கும் மக்கள் கமிட்டிகளுக்கான உறுப்பினர்களைச் சிபார்சு செய்வதற்கான முயற்சியில் ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் ஈடுபட்டுள்ளார்.

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்ற வட்டாரங்களிலிருந்தும் 15 பேர்களைச் சிபார்சு செய்து அனுப்பும்படி உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு பிலிக்ஸ்டயஸ் பண்டாரநாயக்கா ஆட்சி மன்ற உறுப்பினர்களிடம் கேட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை தொகுதியில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களையும் உறுப்பினர்களையும் தொடர்புகொண்டு அவர்களின் ஆலோசனையின் பேரில் மக்கள் கமிட்டிகளுக்கு உறுப்பினர்களைச் சிபார்சுசெய்ய பண்டிதர் க. பொ. இரத்தினம் முடிவு செய்துள்ளார்.

அந்தந்த வட்டாரத்தில் உள்ள தகுதியானவர்களின் பெயர்ப் பட்டியலைத் தயாரித்து அனுப்புமாறு உள்ளூராட்சி மன்ற தலைவர்களையும் உறுப்பினர்களையும் ஊர்காவற்றுறை எம். பி கேட்டிருக்கின்றார்.

### 1952 விருந்து 1971 வரை...

புதுடில்லி, மார்ச் 14 இந்திய லோக்சபை தேர்தலில் 1952-ம் ஆண்டு காங்கிரஸ் 364 ஸ்தானங்களைக் கைப்பற்றியது. 1957-ம் 371 ஸ்தானங்களையும் 1962-ம் ஆண்டு 361 ஸ்தானங்களையும் 1967-ம் ஆண்டு 283 ஸ்தானங்களையும் பெற்றது காங்கிரஸ்பிரிவுபட்டதற்குப் பிறகு நடந்த இத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் இதுவரை வெளிவந்த முடிவுகளின் படி 349 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது

### லோகசபை கட்சி நிலவரம்

கடைசிப்பார்வை

| | |
|---|---|
| மொத்தஸ்தானம் | 518 |
| வெளிவந்த முடிவுகள் | 510 |
| இந்திரா காங்கிரஸ் | 349 |
| காமராஜ் காங்கிரஸ் | 16 |
| தி. மு. க. | 22 |
| ஜனசங் | 22 |
| சுதந்திரா | 08 |
| இ. கம்யூனிஸ்ட் | 23 |
| பிரஜா சோஷலிஸ்ட் | 02 |
| சுயேச்சை | 37 |
| முஸ்லிம்லீக் | 03 |
| மாக்ஸிய கம்யூ | 22 |
| பாரதகிராந்தி | 03 |
| சம்யுக் சோஷ | 03 |

### அன்பழகன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிரசும், நிஜலிங்கப்பா காங்கிரஸ் ஒரு இடத்தையும், கம்யூனிஸ்ட் கட்சி நான்கு இடங்களையும், போர்வார்ட் புளக்கும் முஸ்லிம் லீக்கும் தலா ஒவ்வொரு இடத்தையும்பெற்றுள்ளன

தென் சென்னைத் தொகுதியில் முரசொலி மாறன் 20341 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்

அரசாங்கத் தோட்டத்தில் திராவிடமுன்னேற்றக் குழுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது ஏராளமான மக்கள் வெளியில் காத்திருந்தார்கள் கூட்டத்தின் பின்னர் திரு

கொழும்பு, சனி அரசாங்கத்தின் முற்போக்கான நடவடிக்கைகளுக்கு செனட்சபை இடையூறாக இருப்பதாக சிலபொறுப்புள்ள அமைச்சர்களே கூறி வருவது வருந்தத்தக்கதென்று செனட்சபைத் தலைவர் திரு ஏ இரத்தினாயக்கா இன்று செனட்சபையில் ஒரு கட்டத்தில் தெரிவித்தார்.

கருணாநிதி மக்கள் தமது ஒத்துழைப்பைத் தமக்குத் தொடர்ந்து அளிக்கவேண்டும் என்றும் தமது அரசுக்கு இப்பொழுது பொறுப்புகள் அதிகரித்திருப்பதாகவும் கூறினார்

மந்திரிசபை அமைக்கும்படி திரு கருணாநிதியை கவர்னர் உஜ்ஜல்சிங் அழைத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org